# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள் – 01.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4380/A/2024**

திரு. த. சம்பத் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக
உதவியாளர் (மேல்நிலைக்கல்வி),
முதன்மைக் கல்வி அலுவலகம்,
வேலூர். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.த.சம்பத் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.எச்.கோபிநாதன்,<br>பொதுத் தகவல் அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேல்நிலைக்கல்வி), முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 22.08.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 26.06.2024 தேதியிட்டு மாண்புமிகு முதல்வரின் தனிப்பிரிவிற்கு தான் அளித்த மனுவின் மீது, 1.39 ஏக்கர் விலம் எதை தேதி, நகர மறுநில அளவை செய்யப்பட்டது. இதன் தற்போதைய வார்டு பிளாக் பற்றிய தகவலயும், இதில் எத்தினை பிளாக் எண்கள் அமைந்துள்ளன என்ற தகவலையும், ஒவ்வொரு-பிளாக்கிலும் உள்ள நகர புல எண்கள் பற்றிய தகவலையும், மற்றும் நகர புல எண்கள் படி, உள்ள நிலங்களின் உரிமையாளர்கள் பெயர் பற்றிய தகவலையும் தனக்கு வழங்கக்கோரியுள்ளார். மேலும், 3 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 20.09.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனு நாள் | 21.09.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு.எச்.கோபிநாதன், பொதுத் தகவல் அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேல்நிலைக்கல்வி), முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு உரிய தகவல்கள் ந.க.எண்.4872/2023/ஆ2, 25.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் வழக்குகளை திரும்பப்பெற்றுக்கொள்வதாகவும், மேல்விசாரணை தேவையில்லை எனவும் தெரிவித்து, வழக்கை முற்றாக்கம் செய்து கொள்ளலாம் என்றும் ஆணையத்தின் முன் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து, ***பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், மனுதாரர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் இப்புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது.***

**ஓம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4380/A/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக்கல்வி),
முதன்மைக் கல்வி அலுவலகம்,
வேலூர் - 632 009.

**<u>மனுதாரர்</u>**

திரு. த. சம்பத்
43/34-சி, மேல்தெரு,
ஒடுகத்தூர்,
வேலூர் - 632 103.

Copy to file

KRM/PA 08.07.2026